# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.140/2025

**Deposition of Witness for Prosecution PW 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கவியழகன் | Father's Name | : | கேம்ராஜ் |
| Village | : | கூத்தாநல்லூர் | Taluk | : | கூத்தாநல்லூர் |
| Calling | : | | Age | : | 41 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 23rd day of January 2026.**

**(A1, A2 are present. A4 died. A3 absent. For A3 petition U/s. 355 BNSS is filed and allowed).**

**முதல் விசாரணை**

நான் தற்போது கூத்தாநல்லூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.05.2017 அன்று திருவாரூர் தாலுகா காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியிலிருந்தபோது இரவு பைக் பெட்ரோல் பணியில் நான், தலைமை காவலர் வீரசேகரன், FOP பிரகாஷ் ஆகியோர் ரோந்து பணியில் இருந்தபோது விளமல் அருகே வரும்போது தலைமை காவலர் வீரசேகரனின் மோட்டார் சைக்கிள்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.23 15:14:29 +0530

பஞ்சர் ஆகிவிட்டதால் அங்கேயே போட்டுவிட்டு அப்போது அங்குவந்த Training SI கபிலனின் மோட்டார் சைக்கிளை வாங்கிகொண்டு நாங்கள் ரோந்து பணியை தொடர்ந்தோம். திருவாரூர் கூட்டுறவு நகர் ஆர்ச் அருகே வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தபோது மன்னார்குடியிலிருந்து திருவாரூர் நோக்கி வந்து கொண்டிருந்த காரை மறைத்தபோது அந்த கார் நிற்காமல் வேகமாக திருவாரூர் நோக்கி சென்றது. நாங்கள் மோட்டார் சைக்கிளில் சென்று அந்த காரை விரட்டி சென்றோம். அந்த கார் பௌத்திரமாணிக்கம், வடகண்டம், University Road, கங்களாஞ்சேரி வழியாக மயிலாடுதுறை ரோட்டில் வேகமாக சென்றது. அப்போது தலைமை காவலர் வீரசேகரன் வாக்கி டாக்கி மூலம் நன்னிலம் மோட்டார் பெட்ரோலுக்கு கார் நிற்காமல் சென்று கொண்டிருக்கும் விபரத்தை சொன்னார். சன்னாநல்லூர் பாலம் அருகே நன்னிலம் போலீசார் Parry Guard போட்டு அந்த காரை மறைத்தபோது அந்த கார் திரும்பி திருவாரூர் நோக்கி வந்ததாக நன்னிலம் போலீசார் தகவல் கொடுத்தார். நாங்கள் பாலத்திற்கு மறுபுறம் நின்று கொண்டு அந்த காரை மறைத்தபோது அந்த கார் எங்களை மோதுவது போல் வந்து பைக்கில் மோதி ரோடு ஓரத்திலிருந்த மரத்தில் மோதி நின்றது. மேற்படி காரில் வந்த நால்வருக்கும் காயங்கள் ஏற்பட்டன. காயம்பட்டவர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.23 15:14:37 +0530

திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தோம். இது சம்மந்தமாக தலைமை காவலர் வீரசேகரன் ஆய்வாளரிடம் புகார் கொடுத்தார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் முடிந்து காலை 8.00 மணிக்கு நானும் தலைமை காவலர் வீரசேகரனும் திருவாரூர் தாலுகா காவல் நிலையம் வந்தோம். திருவாரூர் தாலுகா காவல் நிலையத்தில் பொறுப்பு அதிகாரி உதவி ஆய்வாளர் கபிலன் இருந்தார். உதவி ஆய்வாளர் கபிலனிடம் நடந்த சம்பவத்தை தலைமை காவலர் வீரசேகரன் சொன்னார். அந்த விபரத்தை கபிலன் எழுதிக் கொண்டார். உடனே கபிலன் எங்களது மேலதிகாரிகளுக்கு சம்பவம் குறித்த தகவலை தெரிவித்தார். கபிலன் பயிற்சி உதவி ஆய்வாளர் ஆவார். ஆய்வாளர் என்னை விசாரித்தபோது வாகனம் கூட்டுறவு விளமல் நகர் தாண்டி பௌத்திரமாணிக்கம், வடகண்டம், University வழியாக சென்றதாக சொல்லியுள்ளேன். வாக்கி டாக்கி வீரசேகரனிடம் இருந்தது. ஆண்டிப்பந்தல் சென்று கொண்டிருந்தபோது எங்களுக்கு நன்னிலம் பைக் பெட்ரோல் சீனிவாசன் வாக்கி டாக்கியில் கார் திரும்பி வருவதாக தகவல் தெரிவித்தார். மேற்படி விபரத்தை ஆய்வாளர் என்னை விசாரித்தபோது

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.23 15:14:44 +0530

சொல்லியுள்ளேன். சன்னாநல்லூர் பாலத்திற்கும் ஆண்டிபந்தலுக்குமிடையே 3 கி.மீ. தொலைவு இருக்கும். நாங்கள் நின்று கொண்டிருந்த இடத்திற்கும் சன்னாநல்லூர் பாலத்திற்குமிடையே 200 மீ. தொலைவு இருக்கும். கபிலனின் இருசக்கர வாகனத்தின் மீது அந்த கார் மோதியது என்றால் சரி. கார் மோதியதில் இருசக்கர வாகனத்தின் முன் மற்றும் பின் வீல், டேங்க், ஹேண்டில் பார் எல்லாம் சேதமென்றால் சரிதான். காரினுள் இருந்த காயம்பட்டவர்களை வாகனத்தை திறந்து அழைத்து வந்து விட்டோம். உடனே 108 ஆம்புலன்சிற்கு தகவல் தெரிவித்து அவர்களை நள்ளிரவு 1.00 மணியளவில் 108 ஆம்புலன்சில் ஏற்றி திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பினோம். நாங்கள் யாரும் அவர்களுடன் செல்லவில்லை. கார் சென்ற இடமெல்லாம் கடைகள், வீடுகள் உள்ள பகுதி என்றால் சரி. எதிரிகள் ஏற்கனவே முன் குற்றவாளிகளாக இருந்தவர்கள் என்றால் சரி. சாராய வழக்குகள் மற்றும் அடிதடி வழக்குகள் எதிரிகள் மீது ஏற்கனவே இருந்தன என்றால் சரி. திருவாரூர்-மயிலாடுதுறை என்பது காரைக்கால் செல்லக்கூடிய பாதை என்றால் சரி. உதவி ஆய்வாளர் கபிலன் இந்த சம்பவத்தில் எங்களுடன் இல்லை, அவருக்கு எதுவும் தெரியாது. கூட்டுறவு நகரில் நாங்கள் எந்த வாகனத்தையும் மறைக்கவில்லை எனவும் வாகனத்தை நான் பின்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.23 15:14:51 +0530

தொடர்ந்து துரத்தி செல்லவில்லை எனவும் அந்த கார் காரைக்கால் சென்றுவிட்டு திரும்ப வரும்போது தவறி விபத்து ஏற்பட்டது எனவும் ஆஸ்பத்திரியில் சிகிச்சையிலிருந்த எதிரிகளை பிடித்துவைத்து எதிரிகள் முன் குற்றவாளிகள் என்பதால் அவர்கள் மீது பொய் வழக்கு ஜோடித்து வீரசேகரனும் நானும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறோம் என்றால் தவறு. எதிரிகளை எங்கு வைத்து, யார் பிடித்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது சரி. எதிரிகளிடமிருந்து என்ன கைப்பற்றினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரி. பொய் வழக்கில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.23 15:14:57 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS

## Chapter XXIII Code of Criminal Procedure

## IN THE COURT OF SESSIONS JUDGE

## TIRUVARUR

## Sessions Case No.140/2025

**Deposition of Witness for Prosecution PW 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சிவானந்தம் | Father's Name | : | சேப்பன் |
| Village | : | சன்னாநல்லூர் | Taluk | : | நன்னிலம் |
| Calling | : | | Age | : | 55 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 23rd day of January 2026.**

**(A1, A2 are present. A4 died. A3 absent. For A3 petition U/s. 355 BNSS is filed and allowed).**

**முதல் விசாரணை**

நான் தற்போது சன்னாநல்லூரில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். 18.05.2017 ம் தேதி சன்னாநல்லூர் வளைவருகே நானும் சுப்பையா பிள்ளையும் போகும்போது ஒரு கார் மரத்தில் மோதி நின்றது. அந்த இடத்தை போலீசார் பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்தார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் நான் 2 வது சாட்சியாகவும் சுப்பையாபிள்ளை முதல் சாட்சியாகவும் கையெழுத்து

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.23 15:15:10 +0530

போட்டோம். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.3**. என்னுடன் கையெழுத்து போட்ட சுப்பையாபிள்ளை தற்போது உயிருடன் இல்லை. போலீசார் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்தில் எனக்கு வீடு இல்லை, என் வீடு தெருவிற்குள் உள்ளது, என் வீடு உள்ள தெரு காவாளியாகும். சம்பவ இடத்திலிருந்து என் வீடு ஒரு கி.மீ. கிழக்கே உள்ளது. நான் நல்லது கெட்டதற்காக பொதுமக்களுக்காக திருவாரூர் தாலுகா காவல் நிலையம் செல்வேன் என்றால் சரி. சம்பவ இடத்தில் S போன்று ஒரு திருப்பம் உள்ளது என்றால் சரி. ரோட்டின் இடது பக்கத்தில் ரோட்டை ஒட்டினார்போல் மரம் உள்ளது என்றால் சரி. சம்பவ இடத்தில் நாய்கள் நின்று கொண்டிருக்கும் என்றால் சரி. சம்பவ இடத்தில் விபத்தில் கார் மோதிவிட்டதாக கேள்விபட்டேன். காரில் உள்ளவர்களை ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றதாக கேள்விபட்டேன். நான் போலீசாருடன் அதிகம் தொடர்புள்ளவர் என்பதால் போலீஸ் ஸ்டேஷனில் வெள்ளை பேப்பரில் கையெழுத்து

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.23 15:15:18 +0530

போட்டுக் கொடுத்தேன் என்றால் ஆமாம். அதை அனுசரித்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.23 15:15:25 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.